### சமகால அரசியலில் இந்துத்துவ அரசியலுக்கும் –

# மொழி ஆதிக்கத்திற்கும் எதிராக - நமது முதல்வர் போராடிக்கொண்டிருக்கிறார்!

## கொளத்தூரில் – சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற – கழகத் தலைவர் பிறந்தநாள் விழாவில் 'சன் செய்திகள்' தொலைக்காட்சி குணசேகரன் பேச்சு!

சென்னை, மார்ச் 24-

**சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் –அமைச்சர் பி.கே.சேகர் பாபு முன்னின்று நடத்திய, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் நிகழ்வில் - "சன் செய்திகள்" தொலைக்காட்சியின் தலைவர் குணசேகரன் ஆற்றிய உரை வருமாறு :**

நண்பர்களே… நிறைய நிகழ்ச்சிகளுக்குச் சென்றாலும், இது மிகவும் கன்டென்ட் ஃபார்மட் அனைத்துமே வித்தியாசமானதாக இருக்கிறது. 'அறிவுக் களம் திராவிடம் பேசுவோம்' என்ற தலைப்பே சுவாரசியமான தலைப்பு.

இன்றைய இளைஞர்களிடம் கிரிக்கெட் பற்றி 'வினாடி வினா' எடுத்தீர்கள் என்றால், ஜூரியாக வருபவர்களை விட மாணவர்களும் - இளைஞர்களும் அதிக அளவு தெரிந்து வைத்திருப்பார்கள். எந்த பிளேயர், எதில் செஞ்சுரி அடித்தார்? எப்போது அவுட் ஆனார்? எத்தனை விக்கெட்? எவ்வளவு விலை? அனைத்து கான்ட்ரோவர்சியும், எவ்வளவு ஸ்டேட்டிஸ்டிக்ஸ்உம் பேசுபவர்களைவிட கேட்பவர்களுக்குத்தான் கிரிக்கெட்டில் அதிகம் தெரியும்.

அடுத்து, இன்னொரு சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், சினிமா. சினிமா ஸ்டார்ஸ் அல்லது சினிமா இசையமைப்பாளர்கள், பாடல் ஆசிரியர்கள் சினிமா சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களையும் இளம் தலைமுறை மிகவும் அதிகமாகவே தெரிந்து வைத்திருக்கும். அது இரண்டும் தவறு அல்ல, நாம் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டிய நிகழ்வுகள்.

### சமகால அரசியல் – சமுதாயவியல்

ஆனால், அதைவிட தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் என்ன என்று பார்த்தால், சமகால அரசியல் சமகால சமுதாயவியல். இந்த இரண்டிலும்தான் இந்த நிகழ்ச்சி மிகவும் சிறப்புக்குரிய ஒன்றாக நான் பார்க்கிறேன்.

திராவிடம் பேசுவோம் என்று சொன்னீர்கள் என்றால், திராவிடத்தை எதற்காக பேசுவோம்? திராவிடம் பேசுவோம் என்ற ஒரு தலைப்பு, தமிழ்நாட்டின் முதலமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய பிறந்தநாளில் அவருடைய தொகுதியில் எப்படி எல்லாம் இதை கொண்டாட வேண்டும் என்று நினைத்து, ஒரு மனிதநேய திருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள்.

இந்த விழாவின் வாயிலாக ஏழை எளிய மக்களுக்கு வாய்ப்பிருக்கும் வசதிகளில் எல்லாம் உதவிக் கூடிய முயற்சிகளைப் பார்க்கிறோம்.

திராவிடம் பேசுவோம் என்றால், ஏன் பேசுவோம்? என்பது ஒன்று. எது திராவிடம்? என்பது ஒன்றுஇருக்கிறது. திராவிடம் என்பது என்னைப் பொருத்தவரை, ஆதிக்க எதிர்ப்புணர்வு. 'எல்லோர்க்கும் எல்லாம்' கிடைக்க வேண்டும் என்று சொல்லும் வாய்ப்புகளை பரவலாக்குவது. திராவிடம் என்ற சொல், நூறாண்டு கால பழமையான சொல். திராவிடம் பேசியதனால் தமிழ்நாடு இன்றைக்கு தலை நிமிர்ந்து நிற்கிறது. முதல் மாநிலமாக பல அம்சங்களில் முன்னோடியாக இன்றைக்கு இருக்கிறது.

### திராவிட இயக்கம் போட்ட விதை!

இந்தியாவிலேயே அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் வருவதற்கு விதை போட்ட இயக்கம், திராவிட இயக்கம். அதனால்தான் இன்றைக்கு இந்தியா முழுவதும், பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் - பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கான இட ஒதுக்கீடு இன்றைக்கு இருக்கிறது என்றால்; ஒருவர் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆகிறார்; 100 பேரை வேலைக்கு எடுத்தால், அதில் ஓ.பி.சி.க்கு27 சதவிகித இட ஒதுக்கீடு - எஸ்.சி., எஸ்.டி.க்கு என்று வருவதாக இருந்தாலும்; ஐ.ஐ.டி., ஐ.ஏ.எம்., எய்ம்ஸ் போன்ற இடங்களில், மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு இன்றைக்கு இருக்கிறது என்றாலும்; அதற்கு விதை போட்ட பங்களித்த ஒரு மகத்தான இயக்கம், திராவிட இயக்கம்.

திராவிட இயக்கம் என்ற ஒன்று ஆதிக்கத்தைக் கேள்வி கேட்டிருக்கிறது. என்னென்ன ஆதிக்கத்தை எல்லாம் கேள்வி கேட்டிருக்கிறது என்றால், இன்றைக்கு மேடைகளில் இவ்வளவு பெண்களை பார்க்கிறோம். உங்களில் நிச்சயம் 90 சதவிகிதம் பேர் பட்டதாரிகளாக இருப்பீர்கள். இவ்வளவு பேர் படிப்பதற்கு விதை போட்டது எது என்று பார்த்தீர்கள் என்றால், ஒரு திராவிட இயக்கத்தின் அடித்தளத்தில் இருந்து தான் இந்த படிப்பு என்பது வந்திருக்கிறது.

இன்றைக்கு பெண்களுக்கு சொத்தில் சம உரிமை. ஆணுக்கு என்ன உரிமை இருக்கிறதோ, அந்த உரிமை பெண்ணுக்கு உண்டு. ஒரு தாத்தாவின் சொத்து அப்பாவின் சொத்து, ஒரு ஆண் பிள்ளைக்கு மட்டும் சொந்தமல்ல; அவருக்கு என்ன உரிமை இருக்கிறதோ, அந்த உரிமை அனைத்தும் பெண்ணுக்கும் இருக்கிறது என்று இன்றைக்கு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தை நிறைவேற்றியவர் கலைஞர் கருணாநிதி அவர்கள். கலைஞர் அவர்கள் நிறைவேற்றிய அந்தச் சட்டத்திற்கு அடித்தளம் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு1924, 1925களில் தந்தை பெரியார் அவர்கள் கூட்டிய சுயமரியாதை இயக்க மாநாட்டில் பெண்களுக்கு சொத்துரிமை வழங்க வேண்டும் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதை கலைஞர் அவர்கள் நிறைவேற்றினார்.

இன்றைக்கு நம் வாழ்க்கையில் அடைந்திருக்கும் ஏற்றங்களுக்கெல்லாம் ஒரு அடித்தளமாக இருந்த உணர்வு என்பது, திராவிட இயக்க உணர்வு. எதையெல்லாம் திராவிட இயக்கம் பேசி இருக்கிறது? திராவிட பேசுவோம் என்கிறோமே, ஆண் பெண் சமம் என்பதை திராவிடம் பேசியிருக்கிறது. ஆணுக்கு கிடைக்கும் அனைத்தும், பெண்ணுக்கு கிடைக்க வேண்டும் என்று பேசியிருக்கிறது. ஆணுக்கு அரசாங்க வேலைகள்இருக்கிறது என்றால், இன்றைக்கு டி.என்.பி.எஸ்.சி. தேர்வு எழுதிப் பார்த்தீர்கள் என்றால் தெரியும். 30 சதவிகிதம் பேர், எந்த அரசு அலுவலகங்களிலும் பெண்களை நீங்கள் பார்க்கலாம். மற்ற மாநிலங்களில் அவ்வாறு நீங்கள் பார்க்க முடியாது. மத்தியப் பிரதேசத்திற்கோ, பீகாருக்கோ, உத்தரப் பிரதேசத்திற்கோ சென்று பாருங்கள். பெண்கள் கல்லூரிகளில் படிப்பதில், இந்தியாவிலேயே அதிக பெண்கள் நம்முடைய மாநிலத்தில்.

### சமத்துவச் சிந்தனையின் நீட்சி

அண்மையில் ஒரு டேட்டா பார்த்தேன். இந்தியாவில் ஆர்கனைஸ்ட் செக்டாரில் வேலை செய்யும் பெண்கள் வொர்க்ஸ்ஃபார்ஸ் என்று பார்த்தீர்கள் என்றால், ஒரு தனியார் நிறுவனத்திற்கு வேலைக்குச் சென்றாலும், மாதாந்திர ஊதியம் கொடுத்து பி.எஃப்.,



இ.எஸ்.ஐ. கட்டும் அமைப்புச் சார்ந்த தொழில்களில், இந்தியா முழுவதும் 100 பெண்கள் இருந்தால், அதில் 42 பெண்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டும். இது ஒரு நாளில் ஒரு இரவில் நடந்த சாதனை அல்ல. பல ஆண்டு காலமாக இந்த மண்ணில் விதை ஊன்றியஒரு சமத்துவ சிந்தனையின் நீட்சி.

திராவிட இயக்கம் திராவிடம் பேசுவோம் என்று சொல்வது, எதையெல்லாம் எதிர்த்திருக்கிறது என்றால், ஆண் பெண் சமம் என்று சொல்லும் இடத்தில், ஆணாதிக்கத்தை எதிர்த்தது. மொழி என்று வருகிறபோது இந்தி ஆதிக்கம் வருகிறபோது, அந்த ஆதிக்கத்தை எதிர்த்தது. அரசியல் ரீதியாக ஒரு குறிப்பிட்ட சாதியினர் அல்லது ஒரு குறிப்பிட்ட உயர் பிரிவினருக்குதான் அனைத்து அதிகாரமும் இருக்க வேண்டும் என்று சொல்லி இருந்த காலத்தில், இல்லை அந்த ஆதிக்கத்தை எதிர்ப்போம். 'எல்லோர்க்கும் எல்லாம்' கிடைக்க வேண்டும்; சம வாய்ப்பு உருவாக்க வேண்டும் என்று போராடிய இயக்கம், திராவிட இயக்கம்.

எனவே, திராவிடம் பேசுவோம் என்றால், நம்மை பொருத்தவரையிலும், பல பேர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், சமகால அரசியலில் மிக முக்கியமான கருத்தியலாக இன்றைக்கு ஒரு இந்துத்துவ அரசியலுக்கு எதிராக ஒரு மொழி ஆதிக்கத்திற்கு எதிராக, இன்றைக்கு ஒரு போராட்டத்தை தமிழ்நாட்டின் முதலமைச்சர் உங்கள் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்.

இந்தி என்கிற ஒரு மொழியை, மூன்றாவது மொழி என்று திணிக்கப் பார்க்கிறார்கள். இந்தி படிக்காததால், இன்றைக்கு தமிழ்நாடு உயர்ந்திருக்கிறதா? தாழ்ந்திருக்கிறதா? என்று ஒரு ஸ்டேட்டிஸ்டிக்ஸ் எடுத்தீர்கள் என்றால், இந்தியா முழுவதும் மும்மொழி என்று சொல்வார்கள். ஆனால், உண்மையில் மும்மொழி திட்டம் நடைமுறையில் இல்லை. யாரை கேட்டீர்கள் என்றாலும், இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் ஏற்றுக் கொண்டார்கள். மூன்றாவது மொழியாக இந்தியை படிக்கிறார்கள் நீங்கள் ஏன் படிக்க மாட்டேன் என்கிறீர்கள்? என்று தமிழ்நாட்டில் பேசுவார்கள். நீங்கள் திருப்பி ஒரு கேள்வியை அவர்களிடம் கேட்டீர்கள் என்றால், உத்தரப் பிரதேசத்தில் மூன்றாவது மொழியாக நீங்கள் என்ன சொல்லித் தருகிறீர்கள்? மத்தியப் பிரதேசத்தில் நீங்கள் சொல்லித் தரும்மூன்றாவது மொழி என்ன? பீஹாரில் இந்தி, ஆங்கிலத்திற்கு அடுத்துநீங்கள் சொல்லித் தரும் மூன்றாவது மொழி என்ன என்று கேட்டீர்கள் என்றால், அவர்களால் சொல்லவே முடியாது. அங்கு மூன்றாவது மொழி என்ற ஒன்றை அவர்கள் கற்பிப்பதே இல்லை. உண்மை என்னவென்றால், இரண்டாவது மொழியான ஆங்கிலத்தையே அவர்கள் முழுமையாகச் சொல்லிக் கொடுக்கவில்லை. அவர்களுக்கு ஒரு மொழி மட்டும்தான் தெரியும். ஒரு மொழியைத்தான் கற்பிக்கிறார்கள்.

ஆனால், தமிழர்களைப் பார்த்து, தமிழ்நாட்டிற்கு வந்து மூன்றாவது மொழியைக் கற்றுக் கொள்ளுங்கள். இல்லை என்றால், நீங்கள் செலுத்தும் வரிப் பணத்தை திருப்பித் தர மாட்டோம் என்று பேசுகிறார்கள். அதற்கு எதிராக, இந்தியாவில் ஒரே ஒரு குரல் தொடர்ந்து ஓயாமல் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அது இங்கே மாநில உரிமைக்காக வரும் சவால் என்றாலும்; நிதிப் பகிர்வில் நாம் கொடுக்கும் வரியை திருப்பித் தர மாட்டோம் என்ற இடத்தில் எதிர்த்து கேள்வி கேட்பது என்றாலும்; சண்டை செய்வது என்று சொல்கிறோம் அல்லவா, அதுபோல உரிமைக்காக, மொழி உரிமை சமூக நீதி என்கிற உரிமை நிதி உரிமை ஆதிக்க எதிர்ப்புணர்வு மதவாத அரசியலுக்கான எதிர்ப்புணர்வு . சமத்துவத்துக்கான உரிமைக்குரல் அனைத்து இடங்களிலும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் ஒரு குரலாக இருப்பது, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் குரல்.

### போராட்டக் களம்

ஒரு நிமிடம் கற்பனை செய்து பாருங்கள். இன்றைக்கு காலையில் செய்தித்தாள் பார்த்திருப்பீர்கள்; இன்றைக்கு நாள் முழுவதும் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். நான்கு மாநில முதலமைச்சர்கள் கூடி, எங்கள் எம்.பி.க்களின் எண்ணிக்கையை குறைக்காதீர்கள்; தென்னிந்தியாவை வஞ்சித்து விடாதீர்கள்; மக்கள் தொகையை கட்டுப்படுத்தியதற்காக எங்களை தண்டித்து விடாதீர்கள்என்று ஒரு போராட்டக் களத்தை, அதாவது வரலாற்றில் பல கட்டங்களில் இந்தியாவின் போராட்டங்களை பார்த்திருக்கிறோம்.

அதாவது, ஒரு காலகட்டத்தில் சுதந்திரத்திற்கான போராட்டம்; அதற்குப் பிறகு, சமூகநீதிக்கான போராட்டம்; மொழி ஆதிக்கம் வந்தபோது, அதற்கெதிரான போராட்டம்; எமர்ஜென்சி வந்தபோது, கருத்துரிமைப் காப்பதற்கான போராட்டம்; கூட்டாட்சி உரிமையை காப்பதற்காக போராட்டம் இவ்வாறு பல்வேறு கால கட்டங்களில் இந்தியா பல போராட்டங்களை சந்தித்திருக்கிறது என்றால், இன்றைக்கு ஒரு வல்லாதிக்கத்தை எதிர்த்து இந்தியாவில் ஒரு பெரும்பாண்மை வாதத்திற்கு எதிராக ஒரு குறிப்பிட்ட மொழியை பேசக்கூடியவர்கள், ஒரு இந்தி ஆதிக்கத்தை ஒரு இந்துத்துவ அரசியலை கொண்டு வருவதற்கு முயற்சிக்கிற நேரத்தில், அதற்கு எதிராக சமரசம் இல்லாமல் போராடிக் கொண்டிருக்கும் ஒரு முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

சமகாலத்தில், வரலாற்றில் ஒரு முக்கியமான நகர்வுகளை எல்லாம் அவர் முன்னெடுக்கும் நிகழ்வுகளை பார்க்கிறோம்.

இந்த 'வினாடி வினா' என்பது, எனக்கு மிகவும் புதிதாக இருக்கிறது. இந்த விழாவில் பங்கேற்றிருக்கும் உங்கள் அனைவரையும் நான் வாழ்த்துகிறேன்.

நான் மாணவப் பருவத்தில் இருக்கிறபோது, என்னுடைய தாயாரும் சரி, அவர்கள் படிக்கும் வாய்ப்பைப் பெறாதவர்கள். என்னுடைய ஆசிரியர்கள் என்னை ஊக்குவித்திருக்கிறார்கள். என்னுடைய தமிழாசிரியர், பேச்சுப்போட்டி கட்டுரைப் போட்டி கவிதைப் போட்டி என்று எந்தப் போட்டி என்னுடைய பள்ளிக்கூடத்தில் நடந்தாலும் கல்லூரியில் நடந்தாலும் அந்தப் போட்டிகளில் எல்லாம் பங்கேற்று முயற்சி செய்து பார் என்று என்னுடைய ஆசிரியர்கள் என்னை ஊக்குவித்திருக்கிறார்கள். கட்டுரைப் போட்டி என்றாலும் - பேச்சுப்போட்டி என்றாலும், பள்ளிக்கூடத்திலும் - கல்லூரியிலும் நான் பங்கேற்காத விழாக்களே இல்லை. அது என்னுடைய தன்னம்பிக்கையை உயர்த்தியது.

### தோற்றுப்போவது குற்றம் அல்ல!

இதில் எந்த அணி வெற்றி பெற்றாலும், வெற்றி பெறுவதை விட பங்கேற்பதே ஒரு வெற்றி தான். வெற்றி பெறுபவர்கள் மட்டும் வெற்றியாளர்கள் அல்ல. தோற்றுப் போவது குற்றம் அல்ல, குறைவான இலக்குகளை வைப்பதுதான் குற்றம் என்று ஒரு வழக்காக இருந்தது. அம்பேத்கர் அவர்கள் அதை கோட் செய்வார்கள். புரூஸ் லீ அதை இன்னொரு படி மேல் சென்று சொல்லியிருந்தார். 'Failure is not a crime, Low aim in crime'. தோற்றுப் போவது முக்கியம் அல்ல, பங்கேற்காமலேயே இருப்பது குறைவான இலக்குகளை வைத்துக் கொள்வதுதான் குற்றம். அதற்குதான் நீ வருத்தப்பட வேண்டும். இன்னொன்று சொன்னார் புரூஸ் லீ, 'ஒரு பெரிய மேடையில் ஒரு உயர்ந்த இடத்தில் ஒரு உயர்வான கம்பீரமான மேடையில் தோற்றுப் போவதுகூட கௌரவத்திற்குரிய ஒன்றுதான்' என்று சொன்னார். அதனால் இந்த மேடையில் வெற்றி தோல்வி என்பது அல்ல. அறிவிற்கும், இன்னொரு அறிவிற்கும் நடக்கும் போட்டி. நீ அறிவாளியா? நான் அறிவாளியா? இது போன்ற போட்டி எல்லாம் வேறு மாநிலங்களில் நடக்குமா? என்று எனக்கு தெரியவில்லை. சென்னை போன்ற ஒரு நகரை தவிர, இது மாதிரியான ஒரு போட்டி அறிவுக்கு போட்டி, அதாவது இவ்வளவு பெண்களைவைத்திருந்தார்கள் என்றால், பெரிய சமையல் போட்டி நடத்துவார்கள். இல்லை என்றால், கோலப்போட்டி நடத்துவார்கள். அறிவுக்கு போட்டி என்று வைப்பது, அறிவுக்கு முதன்மை இடம் தந்தது தமிழ்ச் சமூகம். அறிவுதான் அற்றம் காக்கும் கருவி. நம்மை உயர்த்தும் கருவி என்று சொல்லி நம்மை வளர்த்தது தமிழ் அறம்.

திராவிட இயக்கம் போதித்ததும், அறிவைத் தேடி பகுத்தறிவை நாடி, இந்த உலகப் பரப்பை விரித்துக் கொள்ளுங்கள் என்று சொல்வது. அறிவைத் தேடிய தால்தான், இன்றைக்கு தமிழ்ச் சமூகம் உலகம் தழுவிய சமூகமாக இருக்கிறது. உலகத்தின் எந்த நாட்டிற்கு நீங்கள் சென்றாலும், 'பார்ச்சூன்ஸ்500 கம்பெனி' என்று சொல்கிறார்களே, உலகத்தின் பணக்கார கம்பெனிகள் செல்வம் மிகுந்த பெரிய பெரிய கார்ப்பரேட்ஸ். தமிழர்கள் வேலை செய்யாத தமிழ்நாட்டைச் சேர்ந்தார்கள் வேலை செய்யாத நிறுவனமே இல்லை என்று சொல்லும் அளவிற்கு, அறிவுத் துறையில் நாம் கொடி நாட்டியிருக்கிறோம்.

அந்த பாரம்பரியத்தின் நீட்சியாக இங்கே நடக்கும் இந்த விழாவில், பங்கேற்பாளர்களுக்கும் வாழ்த்துக்கள்; அதைக் கேட்கும் உங்களுக்கும் வாழ்த்துக்கள். இதை நடத்துவது ஒரு சவாலான காரியம். இந்த சவாலான 'வினாடி வினா'வை நடத்தும் உங்கள் அனைவருக்கும் ஏற்பாட்டர்களுக்கும் வாழ்த்துக்கள். ஏற்பாடு செய்த அமைச்சர் பெருந்தகைக்கு நன்றியும், வாழ்த்துகளும்.

இவ்வாறு குணசேகரன் உரையாற்றினார்.

---

### அமைச்சர் இரா. இராஜேந்திரன் – சென்னை வர்த்தக மையத்தில் துவக்கி வைத்த

# தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் 'பயணச் சந்தை'

## மூன்று நாட்களில் – 5000க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

*சென்னை, மார்ச் 24-*

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின்படி முதன்முறையாக சுற்றுலாத்துறையால் தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட தமிழ்நாடு பயணச்சந்தையை சுற்றுலாத்துறை அமைச்சர். இரா. இராஜேந்திரன் கடந்த 21.03.2025 அன்று துவக்கி வைத்தார்.



இந்த பயணச்சந்தையானது மார்ச் 21 முதல் 23 வரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது. இப்பயணச்சந்தையின் இரண்டாம் நாளான மார்ச் 22-ஆம் தேதி பிற்பகல் முதல் பொது மக்கள் பார்வையிட அனுமதியும் வழங்கப் பட்டது. மாநிலத்தின் வளமான மற்றும் மாறுபட்ட சுற்றுலா வாய்ப்புகளை வெளிப்படுத்தவும், தொழில்துறை ஒத்துழைப்பை வளர்க்கவும், சுற்றுலாத் துறையில் முதலீடுகளை ஈர்க்கவும் இந்த நிகழ்வு ஒரு முதன்மை தளமாக செயல்படும்.

தமிழ்நாடு பயணச் சந்தை நிகழ்விடத்தில், *Travel and Tourism Fair* அமைப்பின் மூலம் பயணச் சந்தை நடத்தப்பட்டது ஒரு கூடுதல் சிறப்பாகும். இதில் தெலுங்கானா, உத்தரகண்ட், தமிழ்நாடு சுற்றுலாத்துறை, நேப்பால் டூரிஸம், ஆந்திரப்பிரேதேசம் டூரிஸம், டெல்லி டூரிஸம், இந்தியா டூரிஸம், ஜார்கண்ட் டூரிஸம், கேரளா டூரிஸம், பஞ்ஜாப் டூரிஸம், உள்ளிட்ட மாநில அரசு சுற்றுலாத்துறை அரங்குகளும் அமைக்கப்பட்டு பயணச்சந்தைக்கு வருகை புரியவர்களுக்கு சிறந்த அனுபவமாக விளங்கியது.

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து, மாநிலத்தின் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதை உறுதி செய்து, நிலையான மற்றும் பொறுப்பான சுற்றுலாவை மேம்படுத்த தமிழ்நாடு அரசு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அவ்வகையில் தமிழ்நாடு பயணச்சந்தையும் ஒரு சிறந்த முன்னெடுப்பாகும். இப்பயணச்சந்தையில் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள் பயண முகவர்கள் மற்றும் தங்கும் விடுதிகள் சார்ந்த தொழில் முனைவோர் ஆகியோர் கலந்துகொண்டு, சுமார் 115 அரங்குகள் அமைத்துள்ளனர். மேலும் இப்பயணச்சந்தைக்கு சிங்கப்பூர், மலேசியா, அயர்லாந்து, ஸ்பெயின், நெதர்லாந்து, துருக்கி, ஆகிய அயல்நாடுகள் மற்றும் 32 உள்நாட்டு முகவர்கள் மற்றும் முதலிட்டாளர்கள் பங்குபெற்று தமிழ்நாட்டு முகவர்களுடன் தொழில் சார்ந்த கலந்துரையாடல் மேற்கொண்டனர் .

தமிழ்நாடு சுற்றுலாப் பயணச்சந்தை 2025, பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள், விருந்தோம்பல் வல்லுநர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் உள்ளிட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்குதாரர்களை ஒன்றிணைத்து, மாநிலத்தின் விரிவான சுற்றுலா வாய்ப்புகளை கண்டறியும். பாரம்பரிய சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, ஆரோக்கிய சுற்றுலா மற்றும் ஊக்கத்தொகைகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் (MICE) போன்ற முக்கிய பிரிவுகளில் வளர்ந்து வரும் போக்குகள், பிராந்திய மேம்பாட்டு முயற்சிகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்த விவாதங்களுக்கு இந்த நிகழ்வு வழிவகுத்துள்ளது.

உத்திசார் முன்முயற்சிகள் மற்றும் வலுவான கொள்கை ஆதரவின் காரணமாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. தமிழ்நாடு பயணச் சந்தை 2025, புதிய வணிக வாய்ப்புகளை வெளிப்படுத்துவதுடன், தொழில் கூட்டாண்மையை வலுப்படுத்துவதுடன், மாநிலத்தின் பார்வையை உலகளாவிய சுற்றுலா மையமாக மாற்றியுள்ளது .

இந்த பயணச்சந்தையில் சர்வதேச அளவில் பயண ஏற்பாட்டாளர்கள் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி முகவர்கள் மற்றும் மாநில அளவிலான பயண ஏற்பாட்டாளர்கள் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி முகவர்கள் மற்றும் பொது மக்கள் என 5000க்கும் மேற்பட்ட நபர்கள் கடந்த மூன்று நாட்களில் தமிழ்நாடு பயணச்சந்தைக்கு வருகை புரிந்துள்ளனர் என சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

---

# திருப்பூரில் சட்டக் கல்லூரி - நிதி நிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும்!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!

*சென்னை, மார்ச்.24-*

திருப்பூரில் சட்டக் கல்லூரி அமைப்பது குறித்து நிதிநிலைமைக் கேற்ப அரசு பரிசீலிக்கும் என, சட்டப் பேரவையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவித்தார்.



சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:

**க. செல்வராஜ்:** (அ) திருப்பூரில் சட்டக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**அமைச்சர்:எஸ். ரகுபதி:** திருப்பூரிலே புதிதாக அரசு சட்டக் கல்லூரி அமைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று சொன்னாலும் நிதிநிலைக்கேற்ப முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அதற்குப் பிறகு முடிவெடுக்கப்படும்.

**க. செல்வராஜ்:** திருப்பூரில் புதிதாக சட்டக் கல்லூரி அமைக்க அரசின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்த அமைச்சர் அவர்களுக்கு திருப்பூர் தெற்குத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், திருப்பூர் மாவட்டம் என்பது தொழிலியல் நகரம் என்பதை நாடறியும். இலட்சக் கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் நிறைந்த எங்கள் திருப்பூர் மாவட்டத்தில் சட்டக் கல்லூரி படிப்புகள் பயிலும், விரும்பும் குழந்தைகள் செல்வங்கள் கோவை, திருச்சி, மதுரை, சென்னை என வெளியூருக்குச் சென்று தங்கிப் பயில வேண்டிய நிலை உள்ளது. ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தினுடைய குழந்தைகளின் சட்டப் படிப்பு கானும் கனவு நனவாக இந்திய ஒன்றியமே திரும்பிப் பார்க்கும் வகையில் நாடு போற்றும் நல்லாட்சி நடத்தி வரும் தாய் உள்ளம் கொண்ட தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மேலும் ஒரு மகுடம் சேர்க்கும் வகையிலே அமையும் என்பதைச் சொல்லி இந்த ஆண்டே அந்த சட்டக் கல்லூரியைத் துவக்கிக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**அமைச்சர் எஸ். ரகுபதி:** உறுப்பினர் அவர்களும் அதைபோன்று நம்முடைய செய்தித் துறை அமைச்சர் அவர்களும் தொடர்ந்து திருப்பூரிலே சட்டக் கல்லூரி அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னாலும் அரசினுடைய நிதிநிலைமைக்கேற்பதான் நாம் சட்டக் கல்லூரியைத் துவங்க முடியும்.

எனவே, முதமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அரசின் நிதிநிலைமை ஒத்துவருமேயானால் அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

### நாமக்கல் துணை மின் நிலைய வளாகத்திற்குள் – மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் –

# வள்ளிபுரம் பகுதியில் - புதிய துணை மின் நிலையம் அமைத்திடுவீர்!

## சட்டப் பேரவையில் – நாமக்கல் பெ.இராமலிங்கம் கோரிக்கை!

*சென்னை, மார்ச்.24-*

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:

**பெ. ராமலிங்கம்:** எனது நாமக்கல் சட்டமன்ற தொகுதியில், நாமக்கல் துணை மின் நிலைய வளாகத்திற்குள் புதிய மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் கட்டுவதற்கு கோப்புகள் தயாரிக்கப் பட்டு, அனுமதிக்காக தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. புதிய துணை மின் நிலையம் அமைக்க வள்ளிபுரம் பகுதியில் இடம் தேர்வு செய்யப் பட்டு, தற்போது கோப்பு நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. எனவே, இவ்விரண்டையும்



இந்த ஆண்டிலேயே அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** உறுப்பினர் அவர்களின் நாமக்கல் சட்டமன்ற தொகுதியில், அரசு 3 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகளை மேற்கொள்ளவிருக்கிறது. அதேபோன்று புதிய அலுவலகம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அங்கிருக்கக்கூடிய மின் இணைப்புகளின் எண்ணிக்கையினைக் கவனத்தில்கொண்டு அதற்கேற்ப துறைசார்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த 3 துணை மின் நிலையங்களில், 2 துணை மின் நிலையங்களுக்கான இடம் வகைமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு புதிய துணை மின் நிலையத்திற்கு இடம் தேவை இருக்கிறது. அதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதிக்காக துறையின் சார்பாக கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. விரைவில் அதற்கான இடத்தையும் பெற்று, இந்த 3 துணை மின் நிலையங்களுக்கான பணிகளும் மேற்கொள்ளப்படும்

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.